தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.

தொலைபேசி: 044 – 22201337

மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

*******

ஆணை எண். 041/ந/2021
நாள். 29.12.2021

திரு.வி.ஆர். விஜயராமன்,
கம்பம். – முறையீட்டு மனுதாரர்

1) நகராட்சி ஆணையர்,
கம்பம் நகராட்சி.
2) திரு.தங்கராஜ், நகரமைப்பு ஆய்வாளர்,
கம்பம் நகராட்சி. – எதிர்மனுதாரர்கள்

தேனி மாவட்டம், கம்பம், காந்தி நகர், 31வது வார்டு, 2Q3 என்கிற முகவரியில் வசிக்கும் திரு.வி.ஆர். விஜயராமன் என்பவரின் 12.04.2021 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 15.04.2021 அன்று பெறப்பட்டு, 041/2021 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு, கம்பம் நகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் இந்நேர்வில் மனுதாரரால் குற்றச்சாட்டப்பட்ட கம்பம் நகரமைப்பு ஆய்வாளர் திரு.தங்கராஜ் அவர்கள் அளித்த வாக்குமூலம் ஆகியவை கவனமாக பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

தேனி மாவட்டம், கம்பம், காந்தி நகர், 31வது வார்டு, 2Q3 என்கிற முகவரியில் வசிக்கும் திரு.வி.ஆர். விஜயராமன் என்பவரின் 12.04.2021 நாளிட்ட மனுவில் கீழ்க்காணுமாறு புகார் அளித்துள்ளார்:-

கம்பம் நகராட்சியில் கட்டிடப் பொறியாளராக / நகர அமைப்பு ஆய்வாளராகப் பணிபுரியும் திரு.தங்கராஜ் என்பவர், கம்பம் நகராட்சியில் கட்டிடப் பொறியாளராகவும், நகர அமைப்பு ஆய்வாளராகவும் பணியாற்றிய காலம் 2008, 2009, 2010, 2011, 2019, 2020 ஆகிய ஆண்டுகளில் Rejected Plan Approval வழங்கி, அதன்பேரில் பல லட்சங்கள் கையூட்டாகப் பெற்றுக்

கொண்டு, அவர்களுக்கு உரிய முறையில் கட்டிடம் கட்ட அனுமதி மறுக்கப்பட்டுள்ளதன் பேரில், அதனைப் பொருட்படுத்தாமல் கட்டிடம் கட்டி முடித்து அதற்கு கம்பம் நகராட்சி சொத்துவரி விதிப்பும், குடிநீர் இணைப்பும் கம்பம் மின்பகிர்மானம் மின் இணைப்பும் தொடர்ந்து பல கோடி ரூபாய் பெறுமான கட்டிடங்கள் கட்டி முடித்து செயல்பட்டுக் கொண்டு வருகின்றார். அதன் பேரில், தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 ஆம் ஆண்டின்படி பிரிவுகள் 199, 216(1)(2) 317 ஆகியவற்றில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்கிற பதிவுத்தபால் அறிவிப்பும் Prosecution Notice-ம் அனுப்பிடவில்லை. திரு.தங்கராஜ் அவர்கள், தான் நகரமைப்பு ஆய்வாளராக கம்பம் நகராட்சியில் பணி செய்த ஆண்டு 2008-ல் 18 கட்டிடங்களுக்கு Rejected Plan-ம், 2009-ல் 22 கட்டிடங்களுக்கு Rejected Plan-ம், 2010-ல் 38 கட்டிடங்களுக்கு Rejected Plan-ம், 2011-ல் 45 கட்டிடங்களுக்கு Rejected Plan-ம், 2019-ல் 12 கட்டிடங்களுக்கு Rejected Plan-ம், 2020-ல் 8 கட்டிடங்களுக்கு Rejected Plan-ம், வழங்கி தனது பணிக்காலத்தில் Rejected Plan வழங்கி, அதன்பேரில் பல கோடிக்கணக்கான மதிப்புள்ள கட்டிடங்கள் கட்டுவதற்கு உடந்தையாக இருந்து இருக்கையில், பலப் பல லட்சங்கள் பணம் கையூட்டு பெற்றுக் கொண்டு, அவர்களுக்கு Prosecution Notice கூட அனுப்பாமலும், அவைகளை நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு உட்படுத்தாமலும், அக்கட்டிடங்களுக்கு வரிவிதிப்பு, மின்இணைப்பு, குடிநீர்க் குழாய் இணைப்புகள் வழங்குவதற்கு உடந்தையாகவும் செயல்பட்டு வரும் நகரமைப்பு ஆய்வாளர் / கம்பம் நகராட்சி கட்டிடப் பொறியாளர் திரு.தங்கராஜ் மீது துறை நடவடிக்கை எடுத்து தனியாக ஒரு Fact Finding Committee அமைத்து, மேற்படி கட்டிடங்களைப் பரிசீலனை செய்து, அவற்றின் Market Value-க்களை கண்டறிந்து அவைகளுக்கு மின்இணைப்பு, சொத்துவரி விதிப்பு, குடிநீர்க் குழாய் இணைப்பு கொடுத்த குற்றச்செயலுக்கு அவைகளைத் துண்டித்து, அவர்களை நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு உட்படுத்த வேண்டி மொத்தம் 143 கட்டிடங்களைப் பரிசோதனைக்கு உட்படுத்தி, உரிய சட்ட நடவடிக்கை எடுக்கவும், இவரின் செயலால் அரசுக்கு வருவாய் இழப்பு ஏற்படுத்தியுள்ள குற்றச் செயலுக்கும் தக்க சட்ட நடவடிக்கை எடுக்கவும், பெரும்பாலான கட்டிடங்கள் சர்க்கார் புறம்போக்கு நிலத்தில் கட்டப்பட்டுள்ளது எனவும் மனுதாரர் தெரிவித்துள்ளார்.

2. மனுதாரரின் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு இம்முறைமன்ற 24.06.2021 நாளிட்ட கடிதம் வாயிலாக கம்பம் நகராட்சி ஆணையருக்கு ஆணையிடப்பட்டது. கம்பம் நகராட்சி ஆணையர் தன்னுடைய 28.10.2021 நாளிட்ட கடிதம் ந.க.எண்.1481/2021/எப்1-ல் கீழ்க்காணுமாறு அவருடைய அறிக்கையை சமர்ப்பித்துள்ளார்:-

கம்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட 33 வார்டுகளில் கட்டிட அனுமதி வேண்டி பெறப்படும் விண்ணப்பங்களில் உரிய ஆவணங்களின்படி இடம் ஆய்வு செய்யப்பட்டு, தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 197, 204, 208, 213 மற்றும் 215வது பிரிவின் கட்டிட, திட்ட விதிகள் பாதிக்காமல் இருந்தால் நகராட்சியின் மூலம் கட்டிட அனுமதியும், கட்டிட, திட்ட விதிகளுக்கு முரணாக இருந்தால் கட்டிட அனுமதி மறுப்பாணை உத்திரவும் நகராட்சியின் மூலம் வழங்கப்படுகிறது. ஆனால் கட்டிட அனுமதி மறுப்பாணை உத்திரவு வழங்கப்படும் வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள உத்தேச கட்டிட பரப்பளவுகளின்படி, நகராட்சிக்கு செலுத்த வேண்டிய கட்டிட அனுமதி கட்டணம், அபிவிருத்திக்கட்டணம் மற்றும் தொழிலாளர் நலநிதி

கட்டணம் தொடர்புடைய கட்டிடத்தின் உரிமையாளர் வசம் பெறப்பட்டபின்பு கட்டிட அனுமதி மறுப்பாணை உத்திரவு வழங்கப்படுகிறது. புகார்தாரர் தெரிவித்துள்ள கட்டிடங்கள் அனைத்தும் ஏற்கனவே கள ஆய்வு செய்யப்பட்டு கட்டிட விதிகள் பாதிக்காத கட்டிடங்களுக்கு கட்டிட அனுமதியும், அனுமதியின்றி கட்டப்பட்டு வரும் கட்டுமானப் பணிகள் தொடர்பாக அவ்வப்போது கள ஆய்வு செய்து கட்டிடத்தின் உரிமையாளர்களுக்கு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 199, 209, 216 (1), (2) மற்றும் 317-இன்படி உரிய முறையில் அறிவிப்பு வழங்கப்பட்டு கட்டுமான பணிகளை நிறுத்தி வைக்கவும், குறிப்பிட்ட கால கெடுவிற்குள் பிரிவு 197-இன்படி விண்ணப்பம் செய்து உரிமையாளர் அனுமதி பெற்று பணிகள் தொடர வேண்டியது எனவும், அவ்வாறின்றி தொடர்ந்து கட்டுமான பணிகள் செய்தால் நீதிமன்றத்தின் மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென அறிவிப்பு வழங்கப்பட்டதினை தொடர்ந்து மேற்படி கட்டிடத்தின் உரிமையாளர் மூலம் பெறப்படும் கட்டிட அனுமதி விண்ணப்பத்தினை ஆய்வு செய்து கட்டிட அனுமதி கட்டணம், அபிவிருத்தி கட்டணம், தொழிலாளர் நலநிதி கட்டணம் மற்றும் கட்டிட அனுமதி கட்டணத்திலிருந்து கூடுதலாக 50 சதவீதம் அபராதத்தொகை பெறப்பட்ட பின்பு கட்டிட மற்றும் திட்ட விதிகளுக்கு முரணாக இருப்பதை குறிப்பிடப்பட்டு கட்டிட மறுப்பாணை உத்திரவு வழங்கப்பட்டுள்ளது. மேலும் அறிவிப்பு பெற்றும் கட்டிட அனுமதி விண்ணப்பம் நகராட்சியில் சமர்ப்பிக்காமல் கட்டிடத்தின் உரிமையாளர் தொடர்ந்து கட்டுமான பணிகள் செய்தால் கட்டிடத்தின் உரிமையாளருக்கு நகராட்சியின் மூலம் இறுதி அறிவிப்பு வழங்கப்பட்டு தொடர்ந்து நீதிமன்றத்தின் மூலம் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அரசு புறம்போக்கு இடங்களில் கட்டிட அனுமதி ஏதும் நகராட்சியின் மூலம் வழங்கப்படவில்லை. நகராட்சியின் மூலம் வழங்கப்படும் கட்டிட அனுமதி மற்றும் கட்டிட மறுப்பாணை உத்திரவின்படி வரைபடத்தில் உத்தேசிக்கப்பட்ட கட்டிட பரப்பளவிற்கு தகுந்தவாறு சொத்துவரி மற்றும் குழாய் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. புகார் மனுவில் குறிப்பிட்டவாறு நகராட்சிக்கு வருவாய் இழப்பு மற்றும் விதி மீறல் ஏதும் செய்யப்படவில்லை. மேலும் மனுதாரர் திரு.வி.ஆர். விஜயராமன் என்பவர் கடந்த 09.06.2021 அன்று காலமாகி விட்டார் என்ற விபரத்தினையும் தெரிவித்துள்ளார்.

இம்மனு தொடர்பாக 08.12.2021 அன்று நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு 01.12.2021 நாளிட்ட அழைப்பாணை மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரான நகரமைப்பு ஆய்வாளர் திரு.ம.தங்கராஜ் ஆகியோருக்கு அழைப்பாணைகள் அனுப்பப்பட்ட நிலையில்,

08.12.2021 அன்று நடைபெற்ற நேரடி விசாரணையில் மனுதாரரால் திரு.வி.ஆர்.விஜயராமன் கலந்து கொள்ளவில்லை. எதிர்மனுதாரரான நகரமைப்பு ஆய்வாளர் கலந்து கொண்டு கீழ்கண்டவாறு தமது வாக்குமூலத்தை சமர்பித்தார்.

கம்பம் நகராட்சியில் மனுதாரர் திரு.விஜயராமன் என்பவர் தெரிவித்துள்ள அனுமதி பெறாத கட்டிடங்களில் சிலவற்றிற்கு அறிவிப்பு (Notice) சார்பு செய்து, அதற்கான Rejected Plan Fee நகராட்சியால் வசூல் செய்யப்பட்டது என்கின்ற விவரத்தையும், மேற்கண்ட அனுமதி பெறாத கட்டிடங்களுக்கு Town and Country Planning Act படி Prosecution Notice

நகராட்சியால் வழங்கப்படவில்லை என்பதையும் இம்முறை மன்றத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், மேனன் என்பவர் கட்டியுள்ள வீடு பழைய வீட்டை புதுப்பித்து கட்டப்பட்ட வீடாகும். அதற்கும் Rejected Plan Fee நகராட்சியால் வசூல் செய்யப்பட்டது என்பதையும் இம்முறைமன்றத்தில் தெரிவித்துக் கொள்கிறேன் என்று தெரிவித்துள்ளார்.

3. இந்நேர்வில் மனுதாரரது மனு, ஆணையாளரின் அறிக்கை, மனுதாரரால் குற்றஞ்சாட்டப்பட்ட எதிர்மனுதாரர் கம்பம் நகராட்சி நகரமைப்பு ஆய்வாளர் அளித்த வாக்குமூலம் ஆகியவை கவனமாக பரிசீலனை செய்யப்பட்டன.

கம்பம் நகராட்சி ஆணையர் அளித்த ஆவணங்களை பரிசீலனை செய்ததில் கட்டிட அனுமதி மறுப்பாணை உத்தரவு வழங்கப்பட்ட கட்டிட உரிமையாளர்களிடமிருந்து கட்டிட அனுமதி கட்டணம், அபிவிருத்தி கட்டணம் மற்றும் தொழிலாளர் நல நிதி கட்டணம் ஆகியவை வசூலிக்கப்பட்டுள்ளது தெரிகிறது. அரசு புறம்போக்கு நிலங்களில் கட்டிடங்கள் கட்டப்பட்டதாக புகார் அளித்த மனுதாரர் அக்குற்றச்சாட்டை நிரூபிக்க எவ்வித ஆவணங்களையும் சமர்ப்பிக்கவில்லை.

மேலும், கம்பம் நகரமைப்பு ஆய்வாளர் கையூட்டு பெற்றுக் கொண்டு கட்டிட அனுமதி மறுப்பாணை உத்தரவு (Rejected Plan approval) வழங்கினார் என்பதற்கும் எவ்வித ஆதாரங்களையும் மனுதாரர் அளிக்கவில்லை. மனுதாரர் தமது குற்றச்சாட்டுகள் எதற்கும் போதிய ஆதாரங்களை சமர்ப்பிக்காததால் இச்குற்றசாட்டுகளில் உண்மை தன்மை இல்லை என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து இம்மனு மீதான நடவடிக்கையை இத்துடன் முடித்து வைக்கலாம் என முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2021 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 29 ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) திரு.வி.ஆர்.விஜயராமன்,
203, வார்டு 31, காந்தி நகர்,
கம்பம், தேனி மாவட்டம் - 625 516.

2) ஆணையாளர்,
கம்பம் நகராட்சி,
தேனி மாவட்டம் - 625 516.

3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
நெ.75, சாந்தோம் மெயின் ரோடு,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28.

4) இணை இயக்குநர் /ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
நெ.75, சாந்தோம் மெயின் ரோடு,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28.

நகல்.

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளருக்காக.